அன்பு மொழி வாழும் எங்கள் அன்னை மண்ணை பாடு
இது அண்ணன் தந்த வாழ்கை என்று கைகள் தட்டி ஆடு 2
இயற்கை எம் நண்பன் இலட்சிய நெஞ்சன்
தலைவன் கொள்கை அழகு கோடி நன்மையே
கருணையே கண்கள் கசிந்திடும் பண்பில்
தமிழரின் தாய்மையான தலைவன் மேன்மையே

அன்பு மொழி வாழும் எங்கள் அன்னை மண்ணை பாடு
இது அண்ணன் தந்த வாழ்கை என்று கைகள் தட்டி ஆடு 2

பெருமையோடு தலைகள் நிமிர எழுந்த துணிவு அன்பு
உரிமை வாழ உயிரை வீசும் உணர்வு உச்ச அன்பு
களத்தைக்காண வாழ்வுக்காக ஆயுதத்தில் அன்பு
சுயத்தை வென்ற மனசுதானே ஆயுள் வரையும் அன்பு
தமிழர் பாடும் புலமை நெஞ்சம் வலிமையான அன்பு
வழமை பேசும் வார்த்தைகளில் அனுபத்தில் அன்பு
மளைனம் கூட எங்கள் வாழ்வில் மர்மமான அன்பு

அன்பு மொழி வாழும் எங்கள் அன்னை மண்ணை பாடு
இது அண்ணன் தந்த வாழ்கை என்று கைகள் தட்டி ஆடு 2

வானம்போல நீண்ட உறுதி வாழ்வு தந்த அன்பு
வறுமையான வாழ்வில் கூட வடிவு காணும் அன்பு
சாதனைகள் செய்ய வைத்த போர்களத்தில் அன்பு
சமத்துவங்கள் வாழ்க என்று சங்கை ஊதும் அன்பு
காவல் செய்யும் விழிகளோடு கலந்த வீரம் அன்பு
காலம் வெல்லும் ஈகம் மீது காதல் செய்யும் அன்பு
மரணம் கூட எங்கள் மண்ணில் அர்த்தமான அன்பு

அன்பு மொழி வாழும் எங்கள் அன்னை மண்ணை பாடு
இது அண்ணன் தந்த வாழ்கை என்று கைகள் தட்டி ஆடு 2
இயற்கை எம் நண்பன் இலட்சிய நெஞ்சன்
தலைவன் கொள்கை அழகு கோடி நன்மையே
கருணையே கண்கள் கசிந்திடும் பண்பில்
தமிழரின் தாய்மையான தலைவன் மேன்மையே

அன்பு மொழி வாழும் எங்கள் அன்னை மண்ணை பாடு
இது அண்ணன் தந்த வாழ்கை என்று கைகள் தட்டி ஆடு 2